மேலும், சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதால் பேரூராட்சிக்கு மின் கட்டணம் மற்றும் பராமரிப்புக் கட்டணமும் கூடுதலாகும். பேரூராட்சியில் தற்போது போதுமான நிதி வசதியும் இல்லை. எனவே, இப்பேரூராட்சியில் கூடுதல் சோடியம் ஆவி விளக்குகளோ, குழல் விளக்குகளோ அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. அன்பழன்.

திரு. ஜெ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகராயநகர் பேருந்து நிலையத்திற்கு அருகிலுள்ள உயர்கோபுர சோடியம் ஆவி விளக்கு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்பழகன். இது திருநின்றவூர்.

வினா எண் 56, திரு. த. ஆறுமுகம். மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

56—

நச்சுக் காற்றைத் தடுத்தல்

•18991—திரு. த. ஆறுமுகம்:

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மண்டலம்-I மற்றும் 2 பகுதிகளுக்குட்பட்ட எம்.ஆர்.நகர், ஆர்.ஆர்.நகர் மற்றும் கொடுங்கையூர் பகுதிகளைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சுக் காற்றை சுவாசிப்பதால் மூச்சுத் திணறல் ஏற்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அங்கு வசிக்கும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட

2003 மார்ச் 24]

புகாரின் அடிப்படையில், மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் விரிவான ஆய்வு மேற்கொண்டது. அங்கிருக்கும் தொழிற்சாலைகளால் காற்று மாசடைவது அறியப்பட்டது. எனவே, காற்று மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுச் சட்டம் 1981 மற்றும் நீர் மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுச் சட்டம் 1974 ஆகியவற்றின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு அத்தொழிற்சாலைகளை மூடும்படியும், மின் இணைப்பைத் துண்டிக்கும்படியும் ஆணை வழங்கப்பட்டது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிவுறுத்தலின்பேரில் அத்தொழிற்சாலைகள் தற்போது காற்று மாசுத் தடுப்புச் சாதனங்களைப் பொருத்தி இயங்கி வருவதால் மேற்கண்ட தொழிற்சாலைகளிலிருந்து வரும் காற்று மாசு முழுமையாகத் தடுக்கப்பட்டுள்ளது. அத்தொழிற்சாலைகளின் செயல்பாட்டினை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருவொற்றியூர் தொகுதியிலுள்ள பல்வேறு தொழிற்சாலைகளிலிருந்து குறிப்பாக எண்ணூர் பகுதியிலுள்ள இ.ஐ.டி. பாரி தொழிற்சாலை, மணலி பகுதியில் இருக்கின்ற மணலி ஃபெர்டிலைசர் லிமிடெட் தொழிற்சாலை மற்றும் எம்.ஆர்.எஃப் தொழிற்சாலை, எண்ணூர் அனல் மின் நிலையம் போன்ற தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படுகின்ற நச்சுக் கலந்த.......

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதற்கான அமைச்சரின் பதில் முடிகிற வரைக்கும் பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள் விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. த. ஆறுமுகம்: சல்பர் மற்றும் ஜிப்சம் கலந்த புளோரைடு காற்றிலே கலந்து பொதுமக்களைப் பாதிக்கின்ற காரணத்தினாலும், இவை மேலும் தரைமேல் படிகின்ற சூழ்நிலையினாலும் பல ஆயிரக்கணக்கான மக்களைப் பாதிக்கின்ற நிலைமை உள்ளது. மேலும், சென்னை மண்டலமான 1, 2 கொடுங்கையூர் பகுதியிலுள்ள பல ஆயிரக்கணக்கான மக்கள் ஆர்.கே. நகர், திருவொற்றியூர் தொகுதியிலுள்ள மக்கள் முழுமையாக பாதிக்கப்படுகின்ற காரணத்தினாலும், அங்கே கொட்டப்படுகின்ற குப்பைகள் அங்கே இருக்கின்ற மக்களின் சுற்றப்புறத்தை, அவர்கள் மேலும் வாழ முடியாத சூழ்நிலைக்கு ஆளாக்குகின்ற காரணத்தினாலும், அந்தக் குப்பைகளை

சென்னையினுடைய ஒதுக்குப்புறத்தில் கொட்டுவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதோடு, அந்தத் தனியார் தொழிற்சாலைகளுடைய ஒப்புதலைப் பெற்று நச்சுக் கலந்த புளோரைடை வெளியேற்றுகின்ற புகைபோக்கியினுடைய உயரத்தை உயர்த்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தி, அந்தக் குப்பைகளையும் அகற்ற அரசு முன்வருமா என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகார் வந்ததன் அடிப்படையில் 19-1-2002 அன்று தொழிற்சாலைகளின் மின்இணைப்பு துண்டிக்கப்பட்டு, மூடப்பட்டன. பிறகு காற்று மாசு தடுப்புச் சாதனங்கள் பொருத்திய பின்பு 1-4-2002 முதல் அத்தொழிற்சாலைகள் மீண்டும் செயல்பட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உறுப்பினர் கூறிய புகார்கள் குறித்து நேரில் சென்று ஆய்வு செய்து, அப்படி தவறுகள் நடந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

3. தகவல் கோரல்

(அ) ஈராக் மீது அமெரிக்கா நடத்தும் யுத்தத்தைக் கண்டித்தும் முடிக்கவும் தீர்மானம் கொண்டுவரக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2003-2004 ஆம் ஆண்டுக்கான (குறுக்கீடுகள்)* திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: நம்முடைய இந்திய மக்களை கடுமையாக பாதிக்கக்கூடிய முறையில் ஈராக்கிலே ஒரு யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. அமெரிக்காவினால் நடத்தப்படுகின்ற அந்த யுத்தத்தை விரைவிலே முடித்துக்கொள்ள வேண்டும் என்ற முறையிலே அந்த யுத்தத்தை ஏற்படுத்தியதைக் கண்டித்து, அந்த யுத்தத்தை முடிப்பதற்கு